**தலைப்பு 260 - நுவரேலியா மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கையின் 1 ஆம் பந்தி தொடக்கம் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி தொடக்கம் தலைப்புகளுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் காணப்படுகின்றன.

## 1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

(அ) நுவரேலியா பிரதேச செயலகம்

(ஆ) அம்பகமுவ பிரதேச செயலகம்

(இ) வலபனே பிரதேச செயலகம்

(ஈ) கொத்மலே பிரதேச செயலகம்

(உ) ஹங்குரன்கெத்த பிரதேச செயலகம்

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் கணக்கிணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2015 ஜுன் 19 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல்களது மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய மூலவளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமானதோர் விரிவானதொரு கணக்காய்வை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள்

என்பவற்றிற்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்டச் செயலகத்திற்கான மொத்த நிதியேற்பாடு ரூபா 423.3 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டு முடிவளவில் அதில் ரூபா 375.0 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய, தேறிய நிதியேற்பாட்டில் சேமிப்புக்குள்ளாகிய தொகை ரூபா 48.3 மில்லியன் அல்லது 11 சதவீதமாகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

**2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 378.65 | 332.25 | 46.40 | 12.25 |
| மூலதனம் | 44.65 | 42.72 | 1.93 | 4.32 |
| மொத்தம் | **423.30** | **374.97** | **48.33** | **11.42** |

#### (ஆ) ஏனைய அமைச்சுகளாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தல்.

பல்வேறு பணிகளுக்காக ஏனைய 22 அமைச்சுகளாலும் 16 திணைக்களங்களாலும் முறையே ரூபா 2,604.37 மில்லியன் மற்றும் ரூபா 438.51 மில்லியன் என மொத்தமாக ரூபா 3,042.86 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மீளாவாண்டு முடிவளவில் அந் நிதியேற்பாட்டில் முறையே ரூபா 2,119.81 மில்லியன் மற்றும் ரூபா 422.95 மில்லியன் என ரூபா 2,542.76 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. ஒரு அமைச்சினால் மாவட்டச்

செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 2.23 மில்லியனால் மிகைத்து பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த நிதியில் ரூபா 502.33 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காணப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | அதி உயர் வரம்பு | உள்ளவாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதி உயர் வரம்பு | உள்ளவாறானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 26001 | 30.00 | 29.19 | 19.00 | 19.50 | 105.72 | 74.87 |

**2.3 கட்டு நிதிக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டு நிதிக் கணக்கின் மீதி ரூபா 13.48 மில்லியன் ஆகும்.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 233.89 மில்லியன் ஆகும்.

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறு முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகளுக்கு அமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் அடங்கிய அவதானிப்புரைகளில்

பொருள்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புரைகள் 3.1 தொடக்கம் 3.15 வரையான பந்திகளில் காட்டப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 260 - நுவரேலியா மாவட்டச் செயலகம்

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

மாவட்டச் செயலகத்தினால் கீழே காணப்படும் பதிவேடுகளைப் பேணவில்லை என கணக்காய்வு மாதிரிச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | குறித்த பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| நிலையான சொத்து பதிவேடு | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |
| கணணிகளது உபபாகங்கள், மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்படவில்லை. |

### 3.2 கணக்காய்வுச் சான்றின்மை

மாவட்டச் செயலகத்தின் கூட்டங்கள் நடைபெறும் மண்டபத்தை இரு கூறாகப் பிரிக்கும் (PARTITIONING) ஒப்பந்தம் கட்டிடங்களுக்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதத் (BSR) திற்குப் பதிலாக விசேட கூறு விலை (SSR) யில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 4,832,561 கொடுப்பனவிற்குரிய வீதத் (Rate) தின் பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதிலழித்தல்

மீளாய்வாண்டின்போது மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 11 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படாதிருந்தது. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 67,187,478 ஆகவுமிருந்தது. 2015 ஜுலை 20 ஆந் திகதியளவில் 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு மேலும் பதில் வழங்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 14,149,182 ஆகவுமிருந்தது.

### 3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.4.1 வரவு, செலவுத் திட்ட வேறுபாடு

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு செலவினத் தலைப்புகளுக்கு மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடு செய்த நிதியைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய தொகை அச் செலவின விடயங்களது நிகர நிதியேற்பாட்டின் 5 முதல் 62 சதவீதம் வரையில் அமைந்திருந்தது.

(ஆ) 06 செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் பயன்பாட்டின் பின்னரான சேமிப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்ட காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியனவாக இருக்கவில்லை.

(இ) பிரதேச செயலகத்தினால் ரூபா 122,080 செலவில் கொள்வனவு செய்த சொத்தினது பெறுமதி செலவினத் தலைப்பில் உள்ள தொகையைப் பார்க்கிலும் அதிகரிப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்காக இரு செலவின விடயங்களைப் பயன்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

#### 3.4.2 ஏனைய அமைச்சுகள் திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களால் வழங்கப்பட்ட நிதி

பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதற்காக மாவட்டச் செயலகத்திற்கு ஏனைய அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களால் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஏற்பாடு செய்யப்பட்ட அந் நிதியைப் பயன்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மாவட்டத்தின் நிர்மாண வேலைகளுக்கென நுவரேலியா மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 1,969,281,924 மூலதன நிதியேற்பாடு செய்து, அதில் ரூபா 1,572,947,967 செலவழிக்கப்பட்டு 5 பிரதேச செயலகப் பிரிவுகளில் 3,430 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும், மீளாய்வாண்டு முடிவளவில் அம்மொத்த நிதியேற்பாட்டில் 20 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 396,333,957 பயன்படுத்தப்படாததுடன், அவ்வாறாக ஆரம்பிக்கப்பட்டிருந்த 3,430 செயற்திட்டங்களில் 525 செயற்திட்டங்கள் ஆண்டு முடிவில் தொடர்ந்தவாறும் இருந்தன.

(ஆ) போதியளவு நிதி வசதியற்ற சங்கங்களது கடந்த கால அறிக்கைகளைப் பரீசீலனை செய்யாது ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டமையால் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 16,012,478 பெறுமதியான 14 பல்வேறு பணிகளுக்கான

கட்டிடங்களது நிர்மாண வேலைகள் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நுவரேலியா பிரதேச செயலகம் ரூபா 490,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் அமுலாக்கிய மொராயா நகர முச்சக்கர வண்டித் தரிப்பிடத்தின் அபிவிருத்தி வேலை 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவடையவிருந்த போதும், அதில் 40 மீட்டர் பகுதியானது கணக்காய்வுத் தினமான 2015 மே 20 ஆந் திகதியளவிலும் முடிவடையாதிருந்தது.

(ஈ) ஹங்குரங்கெத்த பிரதேச செயலகம் ரூபா 990,000 செலவில் ஹங்குரங்கெத்த வாவிக் கரையில் வாகனத் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணித்திருந்தபோதும், அவ் வாகன தரிப்பிடத்தில் 3 இற்கு மேற்பட்ட வாகனங்களை தரித்து வைக்க முடியாமல் இருந்தமையால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறவில்லை.

(உ) மீளாய்வாண்டின்போது ரூபா 127,569,526 செலவில் அமுல்படுத்தப்பட்ட 469 செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது 1:2:4, 1:2, ½ :5 மற்றும் 1:3:6 கொங்ரீட் கலவைகள் இடப்பட்டிருந்தன. அக் கலவையினது நியமத்தின் சரியானதன்மை தொடர்பில் எதுவித ஆய்வுகூடப் பரீசீலனைக்கும் உட்படுத்தப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பொறியியலாளர் ஒருவரது அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின்றி ரூபா 1,964,000 மதிப்பீட்டுப் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட வலப்பனே பிரதேச செயலகத்தின் முங்வத்த சனசமூக நிலைய கட்டிடத்தின் தூண்களுக்கிடையேயான இடைவெளி 22 அடிகளாக இருந்தமையால் கொங்ரீட் தளத்தின் மத்திய பகுதி கீழ் இறங்கி இருந்தது.

(எ) கொத்மலே பிரதேச செயலகம் பொறியியல் திட்டமின்றி ரூபா 597,054 மதிப்பீடு செய்திருந்த ஹரங்கல கமநல சேவை நிலையத்திற்குக் அண்மையில் செல்லும் பாதையில் பாலமொன்றினை அமைக்கும் வேலையின்போது கொங்ரீட் இடுதல் குறித்த நியமத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நுவரேலியா பிரதேச செயலகம் நிர்மாணித்த 03 வீதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்த இனடர்லொக் கற்களது நியமமானது ஆய்வுகூடப் பரிசோதனையின் பின்னர் உறுதி செய்யப்படாது ரூபா 1,333,951 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) ஹங்குரங்கெத்த பிரதேச செயலகத்தால் ரிக்கில்லகஸ்கட வர்த்தகப் பல்கூட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்கென மதிப்பீடு செய்த தொகை ரூபா 1,980,000

ஆகும். இது சம்பந்தமாகப் கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொறியியல் தொழில் நுட்பத்திற்கு இசையாதவாறு இறக்கம் உள்ள இடங்களில் ஆறு 16 மில்லிமீட்டர் கம்பிகளைப் பயன்படுத்தி 1”X1” அளவிலான தூண்கள் மற்றும் வீதியின் அருகே நான்கு 16 மில்லி மீட்டர் கம்பிகளைப் பயன்படுத்தி 9”X9” அளவிலான தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன.

(ii) நிர்மாணிக்கப்பட்ட தூண்கள் தளர்ந்து இருந்ததுடன் தூண்களுக்குப் பயன்படுத்திய கொங்ரீட் கலவை 1:2:4 எனும் நியமத்திற்கு அமையாததாகவும் இருந்தது.

(iii) 384.6 $m^2$ வடிவிலான குற்றிக்கற்களால் சுவர்களை கட்டியதாகவும் $70m^2$ வடிவிலான மேற்பூச்சுக்களை மேற்கொண்டதாகவும் தவறான அறிக்கைகளைச் சமர்ப்பித்து 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 555,964 க்கான விலைப்பட்டியல்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(iv) நிர்மாண வேலைகளுக்கு ரூபா 240,560 க்கான கொங்ரீட் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், அவை முறையான கலவையில் இடப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அம்பகமுவ பதுபொல மிரியகஹ வீதியில் கொங்ரீட் கற்களைப் பரவும் வேலைக்கு ரூபா 198,000 செலவிட்டு நிர்மாண வேலை நடைபெற்றிருந்த போதும் அவ்வீதி முற்றாக கீழ் இறங்கியிருந்தது.

(ஓ) நுவரெலியா பிரதேச செயலகம் கும்வூட் வீதி அபிவிருத்தி வேலைச் செயற்திட்டத்தை 2014 டிசெம்பர் 31 அன்று வெற்றிகரமாக நிறைவேற்றி இருந்ததாக அறிவித்து ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,967,525 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2014 மே 20 ஆந் திகதியளவில் வீதி வெகுவாகப் பழுதடைந்திருந்தது.

(ஔ) நுவரேலியா பிரதேச செயலகத்தினால் எதிரிசிங்க மாவத்தையில் இன்டர்லொக் அமைக்கும் வேலைக்கு ரூபா 519,058 செலவிடப்பட்டிருந்தது. அதற்கெனப் பயன்படுத்திய இன்டர்லொக் கற்கள் தரப் பரிசோதனையின்போது புறக்கணிக்கப்பட்டவையாகும்.

(க) 2015 ஏப்ரல் 02 ஆந் திகதியளவிலும் வேலை முடிவடையாதிருந்த ஹங்குரங்கெத்த வாவியின் நடைபாதையை கற்களைப் பதித்து அபிவிருத்தி செய்யும் வேலைக்கு மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,980,000 ஆகும். இதற்கான கொடுப்பனவிற்கு விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலகம் அக் கொடுப்பனவை அங்கீகரித்திருந்தது.

(கா) அம்பகமுவ பதுபொல மீரியகஹ வீதி நிர்மாண வேலை உடன்படிக்கையின் பிரகாரம் 20 மில்லி மீட்டர் கற்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டுமாயினும் 27.5 மில்லிமீட்டர் கற்கள் பதிக்கப்பட்டு அதற்கு ரூபா 1,057,222 மதிப்பீட்டுப் பெறுமதி செலுத்தப்பட்டிருந்தது.

(கி) அம்பகமுவ வெல்லதென்ன தொடக்கம் பொல்பிட்டிய வரை நீண்டிருக்கும் குறுகிய வீதியை அபிவிருத்தி செய்யும் வேலைக்கு ரூபா 388,000 செலவிடப்பட்டிருந்தது. அவ் வீதியினது அபிவிருத்திக்கு 20 மில்லி மீட்டர் கற்களைப் பயன்படுத்த வேண்டியபோதும், அதற்கென 37.5 மில்லி மீட்டர் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(கீ) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் மஹபனத கீழ்ப் பிரிவின் 1302 மீட்டர் வீதியை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு ரூபா 127,780 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வீதியில் 657 மீட்டர் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் எந்த வாகனங்களையும் பயன்படுத்த முடியாதவாறு வீதி மிகவும் கீழ் இறங்கியிருந்தது.

(கு) நுவரேலியா பிரதேச செயலகப் பிரிவில் லிந்துல ஆகரகந்தப் பகுதியில் உள்ள ஓரடிப் பாதையை அபிவிருத்தி செய்யும் வேலைக்கு கொங்ரீட் இடுவதற்காகத் தவறான அளவீட்டு அறிக்கைகளைத் தயாரித்து ரூபா 218,948 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கூ) அம்பகமுவ பிரதேச செயலகத்தில் பிளெக் வோட்டர் வாவி வீதியில் உள்ள மண்ணை அகற்றுவதற்கு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தபோதும், அதன் ஒரு பகுதி தொழிலாளர்களால் நிறைவேற்றப்பட்டதாகத் தவறான தகவல்கள் சமர்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாறிருக்க, அதற்கென ரூபா 156,876 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கெ) ஹங்குரங்கெத்த பிரதேச செயலகம் அமுலாக்கிய வாவியின் நுழைவாயிலில் பாதுகாப்பு அரண்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தினது அளவைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்ட அளவைகள் மற்றும் நேரடி அளவையின்போது அவதானிக்கப்பட்ட அளவைகளுக்கிடையே வேறுபாடுகள் இருக்கையில் அந்த அளவைகள் சரியான தன்மையை என உறுதி செய்யாது ரூபா 990,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கே) நுவரேலியா பிரதேச செயலகம் மற்றும் ஹங்குரங்கெத்த பிரதேச செயலகம் ஆகியவற்றில் கற்களைப் (interlock) பதிக்கும் 4 வேலைக்களுக்கான ஒப்பந்தம் முடிவடைந்த பின்னர் பெறப்பட்ட தவறான ஆய்வு கூட அறிக்கையின் அடிப்படையில் ரூபா 5,454,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(கை) ஹங்குரங்கெத்த வாவியினது ஒற்றையடிப் பாதையில் கற்களைப் பரப்பி அபிவிருத்தி செய்வதற்கான வேலைக்கு (interlock) $743m^2$ கற்கள் பயன்படுத்தப்பட்டமைக்காக ரூபா 864,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஆயினும், $395m^2$ கற்கள் மாத்திரமே பரவப்பட்டிருந்தன.

(கொ) அம்பகமுவ வக்கம சனசமூக நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 990,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட அளவைகள் மற்றும் தனிப்பட்ட விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட அளவைகள் என்பவற்றுக்கிடையே வேறுபாடுகள் நிலவியதுடன் அந்த அளவைகள் சரியான தன்மையை உறுதிப்படுத்தாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(கோ) அம்பகமுவ பிரதேச செயலகத்தினால் வீதிகளில் கொங்ரீட் இடுவதற்கான 8 செயற்திட்டங்களுக்காக ரூபா 5,140,000 செலவிட்டிருந்தது. அந்த 8 வீதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது அவ்வீதிகளில் இடப்பட்ட கொங்ரீட் நியமங்களுக்கேற்றவை என்பதை ஆய்வுகூட பரிசோதனையின் மூலம் உறுதி செய்யாது கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(கௌ) மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் SLS தரச் சான்றிதழ்களுடன் புளொக் கற்களைப் பயன்படுத்தி கட்டிட நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ரூபா 15,012,138 கூட்டுத்தொகையுடைய மதிப்பீட்டிலான 13 கட்டிட வேலைகளுக்கு நியமச் சான்றிதழ் அற்ற புளொக் கற்கள் பயன்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ச) நுவரேலியா பிரதேச செயலகத்தால் 12 நிர்மாண வேலைகளுக்கு ஒப்பந்தகாரர்களாலேயே கற்களுக்கான ஆய்வுகூட அறிக்கைகள் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் ரூபா 6,004,962 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(சா) ஹங்குரங்கெத்த வாவியினது ஒற்றையடிப் பாதை நிர்மாண வேலையின்போது மண்ணை நிரப்புதல், வேலியமைத்தல் மற்றும் வீதியில் கற்களைப் பதித்தல் போன்ற வேலை விடயங்கள் ஒரே விடயமாகக் கணிக்கப்பட்டு ரூபா 1,227,016 தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(சி) ஹங்குரன்கெத்த வாவியினது ஒற்றையடிப் பாதையில் கற்களைப் பரவி அபிவிருத்தி செய்யும் வேலையின்போது நிறைவேறாத கொங்ரீட் வேலைகளுக்கும் ரூபா 105,688 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(சீ) வலப்பனே பிரதேச செயலகத்திலுள்ள முங்வத்த சனசமூக நிலையம் ஆழ்ந்த பள்ளத்தில் அமைந்திருந்தது. இதன் பொருட்டு கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டின்போது அந் நிர்மாண வேலை தொடர்பாக கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் வழங்கப்பட்ட சிபார்சுகள் 2015 ஜூன் 30 ஆந் திகதியளவிலும் குறித்த ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்படாதிருந்தது.

(சு) நுவரெலியா மற்றும் ஹங்குரங்கெத்த பிரதேச செயலகங்கள் இரண்டும் ரூபா 30 மில்லியன் பெறுமதியான 7 ஒப்பந்தங்களை ரூபா 2 மில்லியனிலும் குறைவானதாகக் காட்டும் விதத்தில் 17 பிரிவுகளாக அமைத்து பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(சூ) 4 பிரதேச செயலகங்களால் ரூபா 1,084,399,860 கூட்டுப்பெறுமதியுடைய 2608 செயற்திட்டங்கள் அரச கொள்வனவு வழிகாட்டலின் 3.9.1 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக (குழுவின் சிபாரிசு இல்லாமல்) அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன.

(செ) நுவரேலியா பிரதேச செயலகத்தின் ரூபா 1,980,000 கூட்டுப்பெறுமதியான 2 செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தம் இருபதாயிரம் ரூபாவுக்குக் குறைவான நிதியையுடைய சங்கங்களுக்கு வழங்கப்பட்டமையால் ஒப்பந்தக் காலப்பகுதியின் போது அதனை நிறைவேற்ற முடியாது தொடரப்பட்டிருந்தது.

(சே) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 44(உ)(i) உப பிரிவின் திவிநெகும அபிவிருத்தித் திணைக்களம் அமைக்கப்பட்டதன் பின்னர் சுய விருப்பின் பேரில் சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு இழப்பீடு மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகளுக்காக அத் திணைக்களம் நிதியேற்பாடு செய்ய வேண்டியபோதும், 2015 பெப்ரவரி மாதமளவில் சுய விருப்பின் பேரில் சேவையிலிருந்து விலகிய 49 உத்தியோகத்தர்கள் / ஊழியர்களுக்கு சங்கங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து ரூபா 44,989,431 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 28 ஆந் திகதியளவிலும் அத் தொகை மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது. பணக் கொடுப்பனவிற்கு நிலையான வைப்பிலிருந்த பணம் பெறப்பட்டமையால் சமூக நல சங்கங்களுக்கு 2015 பெப்ரவரி 28 ஆந் திகதியளவில் ரூபா 195,989 வட்டி இழப்பிற்குள்ளாகியிருந்தது.

(சை) ஹங்குரங்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் உள்ள திவிநெகும தலைமையகத்துடன் இணைந்த மக்குறுப்ப சமுர்த்தி வங்கி மற்றும் பொதுச் சங்கம் என்பவற்றுக்கிடையே 2001 ஆகஸ்ட் 09 ஆந் திகதியன்று உருவாகிய உடன்படிக்கையின் பிரகாரம், விற்பனைச் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக 5 பேருக்கு உடன்படிக்கை எதுவுமின்றி ரூபா 100,000 வீதப்படி ரூபா 500,000 கடனாக வழங்கப்பட்டிருந்தபோதும் அக்கடனானது 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது.

(சொ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சிலிருந்து மாவட்டச் செயலகத்தின் திட்டமிடல் பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்ட, அப்பிரிவில் பணியாற்றியிராத மக்கள் பிரதிநிதி ஒருவருக்கும் 2 சேவை வழங்கல் உத்தியோகத்தர்களுக்கும் 2010 – 2014 காலப்பகுதியின் போது ரூபா 1,785,530 சம்பளமாகக் வழங்கப்பட்டிருந்தது.

(சோ) 2014 ஒக்டோபர் 30 ஆந் திகதிய 2014/11 ஆம் இலக்க திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது சுற்றறிக்கைப் பிரகாரம் திவிநெகும சமூக நலன் வங்கிச் சங்கங்களினது உதவிப் பணம் பெறுபவர்களது சேமிப்புகளிலிருந்து நுவரெலியா மாவட்ட பிரதேச செயலகங்கள் ஐந்தின் கீழ் திவிநெகும உதவிப் பணம் பெறுவோர் 25,883 பேருக்கு ரூபா 64,707,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவுகள் 2015 ஜனவரி 30 ஆந் திகதியளவிலும் மீளளிப்புச் செய்யப்படாதிருந்தன. மேலும் 12,022 உதவிப் பணம் பெறுவோருக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 30,055,000 தொகையினை 2015 பெப்ரவரி 28 ஆந் திகதியளவிலும் கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(சௌ) விலங்கின வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு செய்த நிதியில் 2014 மார்ச் 06 ஆந் திகதியன்று ரூபா 7,216,459 கொடுப்பனவு செய்யப்பட்டுக் கொள்வனவு செய்யப்பட்ட 454 பொருட்கள் 2015 ஜனவரி மாதம் வரையிலும் மக்களுக்கு விநியோகிக்கப்படாதிருந்தன.

(ட) இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வங்கி நிதிச் செயற்பாட்டுப் பிரிவால் வெளியிடப்பட்ட 24 ஆம் இலக்க வங்கிச் சங்க செயற்பாட்டு ஆலோசனைச் சுற்றறிக்கைக் கடிதத்தின் பிரகாரம், திரியமாதா கணக்கை ஆரம்பிப்பதற்கான நோக்கம் மற்றும் இலக்கு என்பன பூரணப்படுத்தப்பட வேண்டும். எனினும், ஹங்குரங்கெத்த பிரதேச செயலகப் பிரிவின் திரியமாதா கணக்கில் உள்ள ரூபா 2,514,911 தொகையானது 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் செயலற்றவாறிருந்தது. அதனைக் கணக்காய்வில் சுட்டிக்காட்டியதன் பின்னர் 4807 கணக்குகளில் 214 கணக்குகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(டா) ஹங்குரன்கெத்த சமூக நல வங்கிகள் பத்தினது ரூபா 18,821,457 பெறுமதியான பங்குப் பணம் மற்றும் வைப்புகள் என்பன 2015 மார்ச் 31 ஆந் திகதியளவிலும் செயலற்றவாறிருந்தன. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் 13,573 கணக்குகளில் 330 மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(டி) திவிநெகும சீவனோபாய மற்றும் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இச் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்கு ரூபா 4,066,500 நிதியேற்பாடு செய்யப்பட்டது. 184 நபர்களது 18 பல்வேறு செயற்திட்ட வகைகளை செயற்படுத்துவதற்கு ரூபா 4,052,137 செலவிடப்படுவதற்கு இனங்காணப்பட்டிருந்தது. 2015 ஏப்ரல் 15 ஆந் திகதியன்றும் அத்தொகை செயற்திட்டத்திற்கென பயன்படுத்தப்படாது திவிநெகும சமூக நல வங்கிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது

(ii) கொத்மலே பிரதேச செயலகப் பிரிவுக்கு வழங்கப்பட்ட ரூபா 14,982,250 செலவழிக்கப்பட்டு 567 செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இனங்காணப்பட்டிருந்தது. அத்தொகையில் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் கன்றுக்குட்டிகள், ஆட்டுக்குட்டிகள், மற்றும் கோழிக்குஞ்சுகளை கொள்வனவு செய்வதற்காக வெளி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 3,465,265 வழங்கப்பட்டிருந்தது. எனினும், 5 மாத தாமதத்தின் பின்னர் 2015 மே மாதத்தில் அந்த விலங்குகள் குறித்த நலன் பெறுநர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 3,088,480 பெறுமதியான 11 காசோலைகள் 06 திவிநெகும சமூக நல வங்கிகளுக்கென வரையப்பட்டு அவை செலவின விடயங்களாகக் கணக்கிலிட்டபோதும் நலன்பெறுநர்களுக்கு அத்தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கொத்மலே நிர்த்தேக்கத்தில் மீன் குஞ்சுகளை விடுவதற்கு இலங்கை தேசிய நீரின வாழ் உயிர் வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 497,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 ஜுன் 30 ஆந் திகதியளவிலும் ரூபா 35,218 பெறுமதியான மீன் குஞ்சுகள் நீர்த்தேக்கத்தில் விடப்படாதிருந்தன.

(v) நுவரேலியா பிரதேச செயலகம் 2014 பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் அமுலாக்க வேண்டிய ரூபா 700,000 க்கான 10 பொருட்களை உதவியாக வழங்கும் செயற்திட்டங்கள் 2015 மார்ச் 24 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்தன.

### 3.5 கட்டுநிதிக் கணக்குகள்

2015 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் மாவட்டச் செயலகம் தீர்த்து வைக்காதிருந்த கட்டுநிதி மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 791,693 ஆகும். அம் மீதிகள் 2012 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வருவனவாகும்.

### 3.6 பொது வைப்புக் கணக்கு

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஆண்டுகளைக் கடந்துவிட்ட (காணி வைப்புகள் நீங்கலாக) ரூபா 16,523,869 கூட்டுத் தொகையுடைய 376 வைப்புகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 571 க்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 565 (3) பிரகாரம் வைப்புப் பேரேட்டைக் சமப்படுத்தி தனிப்பட்ட மீதிகளது நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 565(3) பிரகாரம் வைப்புப் பேரேட்டின் இறுதிக் கணக்கிணக்கம் தயாரிக்கப்பட்டு அம் மீதி தயாரிக்கப்பட்ட விதத்தைக் காட்டும் வைப்புப் பேரேட்டுக் கணக்குகளது மீதிகளை பொழிப்பாக்கி தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு மாத முடிவையும் அடுத்து வரும் 15 தினங்களுக்கு முன் அவற்றைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 569 இன் பிரகாரம் வைப்புகள் வகைப்படுத்தப்படவில்லை.

(உ) ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட பொது வைப்புக் கணக்கு மீதி மற்றும் அந்தந்த பிரதேச செயலகங்களால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொது வைப்புக் கணக்குகளது மீதிகளது கூட்டுத் தொகைகளுக்கிடையே ரூபா 31,679,147 வேறுபாடொன்று நிலவியது.

### 3.7 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

விடய இலக்கம் 26001 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்று

சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட மாதிரிச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத் தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 534,673 ஆகும். அந் நிலுவை மீதிகள் 01 தொடக்கம் 08 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதிலான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் காணப்பட்டன.

(ஆ) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவையாக உள்ள கடன்மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாதிருந்தது.

(இ) அம்பகமுவ பிரதேச செயலகத்தில் இனங் காணப்படாத ரூபா 387,507 மீதிகள் காணப்பட்டன.

**3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்டச் செயலகம் மற்றும் 5 பிரதேச செயலகங்களது சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தபடாதோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறோ இருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| | **சொத்து வகை** | **கூறுகளின் எண்ணிக்கை** | **பயன்படுத்தப்படாதோ அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறோ இருந்த காலம்** |
|---|---|---|---|
| | | | **ஆண்டுகள்** |
| (i) | கட்டிடங்கள் | 01 | 07 |
| (ii) | இயந்திர சாதனம் | 02 | 05 க்கு மேல் |

(iii) வலப்பனே பிரதேச செயலகப் பிரிவில் இடர் காரணமாகத் துன்புற்ற மக்களுக்கு விநியோகிப்பதற்கென பெறப்பட்ட ஒரு தொகை சாஸ்பான்கள் (Sauce Pans)

அநேக ஆண்டுகளாகக் களஞ்சியப்படுத்தப்பட்டவாறிருந்தன. பெறப்பட்ட ஆண்டு, யாரிடமிருந்து பெறப்பட்டது, பெறப்பட்ட எண்ணிக்கை போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iv) அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவில் அமுலாக்கப்படும் பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,492,474 பெறுமதியான பொருட்கள் குறித்த ஆண்டின் டிசெம்பர் 31 க்கு முன்னர் விநியோகிக்கப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டுமாயினும், அவ்வாறு செய்யாது களஞ்சியத்திலும் அலுவலக வளாகத்திலும் பாதுகாப்பற்றவாறு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(v) கொத்மலே பிரதேச செயலகத்தில் 264 வேலை அபிவிருத்திச் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 6,698,008 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதும், 2015 மே 30 ஆந் திகதி வரை அப் பொருட்கள் நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படாதிருந்தன.

(vi) நுவரேலியா பிரதேச செயலகப் பிரிவில் பன்முகபப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 605,095 பெறுமதியான 03 கூறுப் பொருட்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளது விசேட செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 781,779 பெறுமதியான பொருட்களது 02 கூறுகள் என்பன 2015 ஜுலை 20 ஆந் திகதியளவிலும் குறித்த நலன்பெறுநர்களுக்கு விநியோகிக்கப்படாது அலுவலகத்தில் பயனற்றிருந்தன.

(vii) வலப்பனே பிரதேச செயலகம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 774,646 பெறுமதியான 07 பொருட்கள் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 687,997 பெறுமதியான 6 பொருட்கள் மற்றும் மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குடிநீர் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ஆண்டின்போது கொள்வனவு செய்த ரூபா 1,905,527 பெறுமதியான 530 நீர் மானிகள் என்பன 2015 ஏப்ரல் 08 வரை நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்

மாவட்டச் செயலகம் 13 ஆண்டுகளாக அலுவலகத்திற்குச் சொந்தமான கட்டிட மொன்றை மத்திய மாகாண சபைக்கு விடுவித்திருந்தது.

(இ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

மாவட்டச் செயலகத்தில் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்க்கப்பட்டிராத ஓராண்டிற்கும் குறைவான ரூபா 1,661,831 பொறுப்புகள் இருந்தன.

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. நிதிப் பிரமாணம் 94 குறிப்பிடும் ஏற்பாடுகளுக்கு முரணாக, 5 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியைப் பயன்படுத்தியதன் பின்னர் எஞ்சிய தொகை ரூபா 395,873 அதிகரிப்புக்குள்ளாகி பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

ii. ஒதுக்கீட்டுக் கணக்கில் 5 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 159,755 கூட்டுத்தொகையான பொறுப்புகள் குறிப்பிடப்படாதிருந்தன.

**3.9 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | |
| அத்தியாயம் VIII பிரிவு 4.1 | 10,642 | 6 வெளிக் கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப் பிரமாணம் 237 | 3,220,785 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைச் சான்றுறுதிப்படுத்துகையில் இணைக்கப்பட |

வேண்டிய விசேட சான்றிதழின்றி வரையப்பட்ட 37 காசோலைகள் 2015 மார்ச் 12 ஆந் திகதியளவிலும் வழங்கப்படாது வைத்திருக்கப்பட்டன.

(ii) நிதிப் பிரமாணம் 1641 - அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கெப் வண்டி ஒன்று 2009 மே 19 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியதன் பின்னர் பழுதுபார்க்கப்பட்டுப் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது ஏறக்குறைய 5 ஆண்டுகளாக தனியார் கராஜ் ஒன்றில் தரிக்கப்பட்டிருந்தது.

## 3.10 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல் செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிட்டு விடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதம் என்பன தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

மாவட்டச் செயலகத்தின் கீழ் வரும் 5 பிரதேச செயலகங்கள் கீழே குறிப்பிட்ட செயற்திட்டங்களை ஆரம்பிக்கப்படாதிருந்தன.

| | பிரதேச செயலகம் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய காலப்பகுதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | |
| (i) | நுவரேலியா | 05 | 297,268,000 | 2014.10.01 முதல் 10,15 ஆந் திகதிகள் வரை | உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை, உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்காமை, மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெறாமை |
| (ii) | கொத்மலே | 33 | 14,100,000 | 2014.07.16 முதல் 12.22 ஆந் திகதிகள் வரை | தொழில்நுட்பப் பிரச்சினைகள், பொதுசன எதிர்ப்பு, ஒப்பந்தகாரர்களால் ஆரம்பிக்கப்படாமை, வீதியை செப்பனிட முடியாது போனமை, மதிப்பீட்டைச் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | சமர்ப்பிக்காமை, அரசியல் அதிகாரிகளால் செயற்திட்டங்கள் திருத்தப்படாமை மற்றும் ஏற்பாடு செய்த நிதி பற்றாக்குறையானமை |
| (iii) | வலப்பனே | 21 | 4,600,000 | 2014.1.10 முதல் 2014.11.10 வரை | தனியார் காணி ஒன்றின் ஊடாக நிர்மாணித்தல், ஒப்பந்தகாரர் வேலையை ஆரம்பிக்காமை, குறித்த சங்கம் உடன்படிக்கைக்கு இணங்காமை, மாவட்ட வனபரிபாலன உத்தியோகத்தர்களது சிபார்சு பெறப்படாமை, சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதையடுத்து நலன்பெறுநர்களுக்கிடையே விநியோகிக்கப்படுவது தடைப்பட்டமை |
| (iv) | ஹங்குரங்கெத்த | 15 | 6,575,000 | 2 செயற்திட்டங்களது ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதியாக 2014.12.15 ஆக அறிவிக்கப்பட்டிருந்த போதும், ஏனைய செயற்திட்டங்களுக்குத் திகதிகள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேச காணி ஆபத்திற்குரியதாகியமை, சீரற்ற காலநிலை, நீர் உருவாகும் இடத்தின் உரித்து பிரச்சினைக்குரியதானமை, மூல செயற்திட்டத்திற்குத் தேவையான நிதி பற்றாக்குறை ஆகியமை, நுழைவுப் பாதை தனியாருக்கு உரித்தானதாக இருந்தமை |
| (v) | அம்பகமுவ | 16 | 3,450,000 | 2 செயற்திட்டங்கள் 2014.11.04 ஆந் திகதி எனவும் மற்றுமொரு செயற்திட்டம் 2014.11.11 ஆந் திகதி எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஏனைய 13 செயற்திட்டங்களது ஆரம்ப திகதி அறிவிக்கப்படவில்லை. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பற்றாக்குறை ஆகியமை, மற்றுமொரு செயற்திட்டத்தின் மூலம் நிதியேற்பாடு செய்யப்பட்ட செயற்திட்டம் ஒன்றின் மூலம் செயற்திட்டமானது அமுலாக்கப்பட்டிருந்தமை மற்றும் பொருட்களைப் பெற முடியாது போனமை |
| | | ------------------ | --------------------- | | |
| மொத்தம் | | **90** | **325,993,000** | | |
| | | ======== | ======== | | |

## 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

மாவட்டச் செயலகம் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) **அரசாங்க கொள்வனவு வழிகாட்டியிலிருந்து விலகல்**

---

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.3(இ) வழிகாட்டிக்கு முரணாக 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவிலும் கொத்மலே பிரதேச செயலகக் காணியை சட்டபூர்வமாகச் சுவீகரிக்காது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அக்காணியில் ரூபா 10,066,970 கூட்டுத்தொகையான உடன்படிக்கைக் பெறுமதியின் அடிப்படையில் 2 உத்தியோகபூர்வ மனைகள் நிர்மாணிக்கப்பட்டவாறிருந்தன.

(ii) மாவட்டச் செயலகத்தில் கூட்டம் நடாத்தப்படும் மண்டபத்தை வெவ்வேறாகப் பிரிக்கும் 2 செயற்திட்டங்கள் ரூபா 5,719,200 கூட்டுத் தொகையுடைய ஒப்பந்தப் பெறுமதியில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.5 (அ) வழிகாட்டலுக்கு முரணாக, கூறு விலைகள் கோரப்படாது, ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்கு அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 மற்றும் 5.4.9 க்கமைய செயலாற்றல் பிணை முறிகள் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.12 நட்டங்களும் இழப்புகளும்**

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் இழப்புகள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காணப்படுகின்றன.

(அ) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் மேல் மாடியை நிர்மாணிக்கும் II ஆம் கட்டத்தின் கீழ் கட்டிடத்தில் முன்பிருந்த 2 தூண்களுக்கும் மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் ரூபா 41,259 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் மேல் மாடியை நிர்மாணிக்கும் II ஆம் கட்ட வேலையின்போது கூரைத் தகடு 8062.65 கிலோ கிறாம் இரும்பிற்கான கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், 7712 கிலோ கிறாம் இரும்பு மாத்திரமே பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 96,250 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.13 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்டச் செயலகம் திருத்தம் மேற்கொள்ளாத பந்திகளுடனான தொடர்பு கீழே காணப்படுகின்றது.

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு**

| ஆண்டு | பந்தி இலக்கம் | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| 2012 | 1.8(அ) VII | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| 2013 | 1.7 (அ) I, II | சொத்து முகாமைத்துவம் |
| 2013 | 1.7 (இ) | சொத்து முகாமைத்துவம் |
| 2013 | 1.8 (அ) V.II | இணங்காமை |
| 2013 | 1,14 III | முகாமைத்துவ நலிவுகள் |

**3.14 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது கீழே குறிப்பிடப்பட்ட நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுவரேலியா பொது நிர்வாக விடுமுறை இல்லப் பராமரிப்பாளரது மனையை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்கு 2012 ஏப்ரல் 4 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட முற்பணம் 2015 பெப்ரவரி 25 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்படாதிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் 66 அரசாங்க சேவை மனைகளைப் பழுதுபார்ப்பதற்குச் செலவிடப்பட்ட தொகையின் 944 சதவீதத்தில் மாவட்டச் செயலகத்தின் 3 பதவி நிலை உத்தியோகத்தர்களது மனைகளைப் பழுதுபார்க்கச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் மேல் மாடியை நிர்மாணிக்கும் வேலையின் போது கட்டிடத்தின் கூரைக்கு சின்ங் அலுமினியம் தகடு பயன்படுத்தப்பட்டமையால் உஷ்ணத்தை குறைப்பதற்காக மெக்பொயில் பயன்படுத்தப்படுவது அவசியமானபோதும், மெக்பொயில் பயன்படுத்தப்படாது கூரை அமைக்கப்பட்டதாலும் திறக்க முடியாத யன்னல் பயன்படுத்தப்பட்டமையாலும் கட்டிடத்தில் பெரும்பாலோர் நடமாடும் வேளைகளில் அதனைப் பயன்படுத்துவது வசதியற்றதாக அமைந்து இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மாதாந்தம் ரூபா 193,840 செலவில் பொறியியல் கூறு ஒன்று பராமரிக்கப்பட்டபோதும், மாவட்டச் செயலகத்தின் கூட்டங்கள் நடாத்தப்படும் மண்டபத்தை வெவ்வேறாக்கும் வேலைக்கும் கீழ்மாடியின் அலுவலக வளாகத்தை வெவ்வேறாக்கும் வேலைக்கும் ஒப்பந்தகாரர் மூலமே மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) நான்கு வாகனங்களது விபத்துக்கள் இடம் பெற்று 5-26 ஆண்டுகளாகியபோதும், ரூபா 550,255 நட்டத்தைப் பதிவழிப்பதற்கோ அல்லது அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) மூன்று சொத்துக்களது பெறுமதி ரூபா 129,720 கூட்டுத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், 5 சொத்துக்களது ரூபா 95,000 கூட்டுத் தொகைப் பெறுமதி ஒதுக்கீடு கணக்கில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 3.15 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 29 | 19 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 15 | 12 | 03 | - |
| (iii) | இரண்டாந் தர மட்டம் | 748 | 665 | 83 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 80 | 83 | - | 03 |
| | மொத்தம் | 872 | 779 | 96 | 03 |

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவிலான 96 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான 5 பிரதேச செயலகங்களில் 3 கணக்காளர் பதவி வெற்றிடங்களாக இருந்தன. அப்பதவிகளில் வெற்றிடம் நிலவுவதானது மாவட்டச் செயலகத்தின் செயலாற்றலுக்கு நேரடித் தாக்கத்தை விளைவிக்கக் கூடியது என அவதானிக்கப்பட்டது.